டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 165 - Madurai | Online Edition

# இந்தாண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டு புதுக்கோட்டையில் தொடங்கியது!

புதுக்கோட்டை, ஜன.4

புதுக்கோட்டை மாவட்டம், தச்சங்குறிச்சியில் நடப்பாண்டின் முதல் ஜல்லிக்கட்டு தொடங்கியது. ஜல்லிக்கட்டை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், ஆட்சியர் அருணா உள்ளிட்டோர் தொடங்கி வைத்தனர்.

தமிழ்நாட்டிலேயே அதிகப்படியான வாடிவாசலை கொண்ட மாவட்டம் புதுக்கோட்டை. இம்மாவட்டத்தில் தான் அதிகப்படியான ஜல்லிக்கட்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் நடைபெறுவது



வழக்கம். அதுமட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங் குறிச்சியில் தான் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நடப்பாண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டு போட்டி உற்சாகமாக தொடங்கியது.

ஜல்லிக்கட்டு தொடங்குவதற்கு முன் ஜல்லிக்கட்டு உறுதி மொழியை ஆட்சியர் அருணா வாசிக்க காளையர்கள் உள்ளிட்ட அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

மேலும் இந்த ஜல்லிக் கட்டுக்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 750 காளைகள் 300 காளையர்கள் பங்கேற்றுள்ள நிலையில் ஒரு சுற்றுக்கு 50 வீரர்கள் வீதம் 6 சுற்றுகளாக இந்த ஜல்லிக்கட்டை நடைபெற்ற வருகிறது.




இந்த ஜல்லிக்கட்டு பங்கேற்றுள்ள அனைத்து காளை களுக்கும் விழா குழு சார்பில் வேஷ்டி வழங்கப்பட்டு வரக்கூடிய நிலையில் சிறந்த முறையில் அதிக காளைகளைத் தழுவும் காளையர்களுக்கும் வீரர்களை திக்கு முக்காட செய்து களத்தில் நீண்ட நேரம் விளையாடும் காளையின் உரிமையாளருக்கும் பல்வேறு பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

மேலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு இருசக்கர வாகனங்கள் பரிசாக வழங்கப்பட உள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளி மற்றும் பப்பாளியில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தக்காளி மற்றும் பப்பாளி பழத்திலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 7.01.2025 மற்றும் 8.01.2025 ஆகிய நாட்களில் கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (வாயில் எண் 7 மருதமலை சாலை) அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தில் கீழ்கண்ட தலைப்புகளில் வழங்கப்படவுள்ளது.






- தக்காளி சாஸ், கெட்சப், பேஸ்ட், பியுரி
- பப்பாளி ஜாம், ஸ்குவாஷ், பேஸ்ட், கேண்டி

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- + GST 18%)- பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. அலைபேசி எண் : 94885 18268, தொலைபேசி எண் : 0422-6611268 தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அக்ரி பிட்ச்பெஸ்ட் 2.0

கோயம்புத்தூர், ஜன.4

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் தாவர உயிர் தொழில்நுட்பத் துறையில் இயங்கி வரும் இ-யுவா (E-YUVA) மையமும், உயிர் தொழில்நுட்ப மகத்துவ மையமும் இணைந்து அக்ரி பிட்ச்பெஸ்ட் 2 .0 (Agri PitchFest 2.0) என்ற ஒரு நாள் போட்டியை ஜனவரி 3 ஆம் தேதி அன்று நடத்தின.



இப்போட்டி வேளாண் பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் முயற்சியில் நடத்தப்பட்டது.




இப்போட்டியின், முதல் சுற்றில், 50 மாணவ அணிகள் பங்கேற்று தங்களின் வேளாண் சம்பந்தப்பட்ட புதிய யோசனைகள் மற்றும் திட்டங்களை காட்சிப்படுத்தினர். அதில், 13 அணிகள் அடுத்த சுற்றுக்கு தேர்வு செய்யப்பட்டனர். மூன்று சிறந்த யோசனைகளுக்கு பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது. முதல் பரிசு கோவை வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கும், 2ஆம் பரிசு கோவை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கும், 3ஆம் பரிசு திருவண்ணாமலை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் இயற்கை வள மேலாண்மை இயக்குனர் முனைவர் ப.பாலசுப்ரமணியம் வெற்றியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் துவக்க விழாவில், தாவர உயிர் தொழில்நுட்ப துறையின் தலைவர், முனைவர் ஈ.கோகிலாதேவி, வரவேற்புரை ஆற்றினார்.




தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில், தலைமையுரை ஆற்றினார். தமிழ்நாடு வேளாண் பல்கலையின் தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் வெ. பாலசுப்பிரமணி, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களை தொழில்முனைவோராக ஊக்கப்படுத்தினார். கோவையை சேர்ந்த சில தொழில் முனைவோர் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 04.01.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 35 | 40 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 54 | 58 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 48 |
| 2 | வெண்டை | 44 | 50 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 18 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 17 | 60 | கேரட் | 60 | 65 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 70 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 70 | 74 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 45 |
| 7 | பீர்க்கன் | 45 | 50 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 22 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | | | |
| 10 | கொத்தவரை | 40 | 44 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 18 | 67 | பட்டாணி | 85 | 95 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 46 | 69 | இஞ்சி | 40 | 46 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 60 | 64 | 70 | புருக்கோலின் | 150 | 160 |
| 15 | சி.வெங்காயம் | 70 | 76 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 78 |
| 16 | பெ.வெங்காயம் | 38 | 42 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 45 | 73 | | | |
| 18 | பச்சை மொச்சை | 60 | 64 | 74 | | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 90 | 98 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 42 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 74 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 40 | 50 |
| 40 | கோவக்காய் | 50 | 60 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 48 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 30 | 35 | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 36 | | | | |
| 55A | துவரை | 55 | 60 | | | | |

# விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

விழுப்புரம், ஜன.4

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம்,சிறுவாடி கிராமத்தில் எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் M.ஜவஹர்லால் மேற்பார்வையில் முனைவர் V. மாலதி, உதவி பேராசிரியர் வேளாண் பொறியியல் துறை, முனைவர் P.ஷீலா உதவி பேராசிரியர் உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து துறை, G.ராஜீவ் உதவி பேராசிரியர் மலர் அறிவியலர் மற்றும் நிலம் எழிலூட்டும் துறை மற்றும் J.கணேசமூர்த்தி உதவி பேராசிரியர் வேளாண்மை பொறியியல் துறை ஆகியோர்



அறிவுறுத்தலில் மற்றும் பேராசிரியர்கள் R.ராஜசேகர், M.R. நவீன்குமார், முகமது இக்ஷானுல்லா ஆகியோர் வழிகாட்டுதலின் படி கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் மரியாரெசா குழுவை சேர்ந்த மாணவிகள் C.காந்திமதி, S.கஸ்தூரி, S.நிசா, M.ஜனனி, R.ஸ்ரீநிதி, K.லக்சன்யா, R.மினிசா, S.ஹேமவர்ஷினி ஆகியோருடன் சிறுவாடி கிராமத்தில் பாதுகாக்கப்பட்ட அமைப்பில் காய்கறிகள் சாகுபடி பற்றியும் பழங்களின் மதிப்பு கூட்டுதல் பற்றியும் வீட்டுத்தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் பற்றியும் உயிர் வாயு உற்பத்தி பற்றியும் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் கிராம பொது மக்களுக்கு V.மாலதி, P.ஷீலா, G.ராஜுவ் மற்றும் J.கணேசமூர்த்தி சிறுவாடி கிராம விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக ஊராட்சி மன்ற தலைவர் சத்யாதில்லை பாபு மற்றும் கிராம நிர்வாக அலுவலர் J.கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை விற்றால் உர விற்பனை உரிமம் ரத்து

## வேளாண்மை இணை இயக்குநர் எச்சரிக்கை

புதுக்கோட்டை, ஜன.4

புதுக்கோட்டை மாவட்ட உர விற்பனையாளர்கள் உரங்கள் இருப்பு மற்றும் விலை விவர பலகையை தினந்தோறும் பராமரிக்க வேண்டும் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்ள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுக் கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிர், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு தேவையான உரங்கள் மாவட்டத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

பயிர் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்களான யூரியா 5798 மெட்ரிக் டன்கள், டிஏபி 806 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 2127 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 2726 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 713 மெட்ரிக் டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**உர உரிமம் பெற்ற மொத்தம் மற்றும் சில்லரை விற்பனை யாளர்கள் கவனத்திற்கு**

- மானிய உரங்களை பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதோ, பிற மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்யவோ கூடாது.
- விவசாயம் அல்லாத பிற பயன்பாட்டிற்கு மானிய உரங்களை வழங்கக்கூடாது.
- உர விற்பனை உரிமத்தில் அனுமதி பெற்ற நிறுவனங் களிடமிருந்து கொள்முதல் செய்து, அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்திட வேண்டும்.
- உரிமத்தில் அனுமதி பெறாமல் கலப்பு உரங்களை இருப்பு வைத்து விற்பனை செய்தல் கூடாது.

● உர மூட்டையின் மேல் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் உரங்களை விற்பனை செய்யக்கூடாது.

● விற்பனை நிலையத்தில் உர இருப்பு மற்றும் விலை விபர பலகையினை விவசாயிகளின் பார்வையில் படும்படி வைத்து தினசரி பராமரிக்கப்பட வேண்டும்.

● உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் மட்டும் விற்பனை செய்திட வேண்டும்.

● விவசாயிகளுக்கு தேவையற்ற இடுபொருட்களை இணைத்து விற்பனை செய்யக்கூடாது.

● தரமற்ற மற்றும் போலியான உரங்களை விற்பனை செய்தல் கூடாது.

● விவசாயிகளுக்கு தேவைக்கு அதிகமாக உரங்களை விநியோகம் செய்யக்கூடாது.




மேலும், விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் - 1955 உரக்கட்டுபாட்டு ஆணை - 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மானியத்தில் நெல்-உளுந்து செயல்திடல்கள் அமைக்க மதுக்கூர் வேளாண் உதவி இயக்குனர் வேண்டுகோள்!



தஞ்சாவூர், ஜன.4

தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் 4ஆம் கட்ட நிலையில் பெரியகோட்டை புளியக்குடி கன்னியாகுறிச்சி காரப்பங்காடு கீழக்குறிச்சி கிழக்கு கீழக்குறிச்சி மேற்கு ஒலய குன்னம் பாவாஜி கோட்டை ஆவி கோட்டை நெம்மேலி ஆகிய கிராமங்களில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தற்போது கோடையில் திருந்திய நெல் சாகுபடி செய்து அதனைத் தொடர்ந்து உளுந்து சாகுபடியும் மேற்கொள்ளும் வகையில் பசுந்தாள் உர விதை முதற் கொண்டு நெல் விதை ஜிங்க் சல்பேட் சூடோமோனாஸ் அசோஸ்பைரில்லம் பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் அசாடிராக்டின் வேம்பு பூச்சிக்கொல்லி மருந்து உளுந்து விதை 20 கிலோ யூரியா சூப்பர் பொட்டாசு உரங்கள். நெல்லிற்குப்பின் உளுந்து சாகுபடி செய்ய எக்டருக்கு 20 கிலோ உளுந்து விதை ஒரு எக்டருக்கு தேவையானவை விதை முதல் அறுவடை வரை தேவையான அனைத்து பயிர் பாதுகாப்பு மருந்துகளுடன் முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

கீழக்குறிச்சி பகுதி விவசாயிகள் கீழக்குறிச்சி வேளாண் உதவி அலுவலரிடமும் பெரிய கோட்டை சுற்றியுள்ள விவசாயிகள் பெரிய கோட்டை வேளாண் உதவி அலுவலரிடம் தொடர்பு கொண்டு 50 சத மானியத்தில் இடுபொருள் பெற்று செயல் விளக்கதளை அமைத்திட வேளாண் உதவி இயக்குனர் மதுக்கூர், தஞ்சாவூர் மாவட்டம் கேட்டுக் கொண்டார்.

மானியத்தில் செயல் விளக்கத் தளை அமைப்பதற்கும் இடுபொருள் பெறுவதற்கும் 1 எக்டருக்கு நெல் சாகுபடி அடங்கல் ஆதார் கம்ப்யூட்டர் சிட்டாவுடன் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# பருத்தியில் பூ, பிஞ்சு உதிர்வதை தடுக்க என்ன செய்யலாம்?



பருத்தி பயிர் ஒரு பணப்பயிர். தற்போது தென்மாவட்டங்களில் கரிசல் மண்ணில் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பருத்தி செடியில் களை எடுத்து பூக்கும் தருணத்தில் சில இடங்களில் காய் உருவாகும் தருணத்தில் உள்ளது. சில இடங்களில் அதிகமாக பூக்களும் சப்பைகளும் உதிர்வதை தடுக்க என்ன வழி என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த பதிவை பதிவிடுகிறேன்.

**பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதற்கு என்ன காரணம் தெரியுமா?**

பருத்தியில் பூ, பிஞ்சுகள், சப்பைகள் உதிர்வதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் சில...

1) பருத்தி பயிருக்கு போதுமான அளவு ஊட்டசத்துகள் குறைபாடுகளாலும் உதிரும்.

2) போதுமான அளவு ஈரப்பதம் மண்ணில் இல்லாத காரணமாக இருக்கலாம்.

3) பருத்தி பயிரின் சுற்றுச்சூழல் மற்றும் மரபியல் சார்ந்த காரணமாகவும் பூக்கள் உதிரும்.

4) பருத்தியில் ரகத்திற்கு ரகம் அப்சிலிக் அமிலத்தின் அளவை குறிப்பிட்ட அளவிற்கு மேல் காய்கள் உதிர்கின்றன.

5) போதுமான தழைசத்து இல்லாத நிலை மட்டுமல்ல சூரிய வெப்பம் அதிகமாக இருந்தால் பூக்கள் உதிரும்.

6) குறிப்பிட்ட இடைவெளியில் பருத்தி செடிகள் இல்லாத நிலையால் போதுமான காற்றோட்ட வசதி இல்லாத காரணத்தாலும் பூக்கள் உதிரும்.

**பூக்கிற பூக்கள் அத்தனையும் காய்களாகும்? இல்லையா?**

பருத்தி செடியில் பூக்கின்ற அத்தனை பூக்களும் காயாக மாறுவதில்லை. 50% பூக்கள் உதிர்ந்தாலும் (கொட்டினாலும்)

மகசூல் இழுப்பு ஏற்படாது. ஆனால் 50% மேல் உதிர்ந்தால் மகசூல் இழுப்பு ஏற்படுகின்றன.

**பூக்கள் பிஞ்சுகள் உதிர்வதை தடுக்க என்ன செய்ய வேண்டும்.**

**1) பயிர் வளர்ச்சி ஊக்கி தெளித்தல்**

மண்ணில் போதுமான ஈரம் இருக்கும் போது இலைவழி தெளிப்பாக நாப்தலின் அசிட்டிக் அமிலம் என்ற பிளோனோபிக்ஸ் 40PPM மருந்தை 60 வது மற்றும் 90வது நாளில் ஒரு லிட்டர் தண்ணீரில் 1மி.லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் பூக்கள், மொட்டுகள் உதிர்வது குறைக்கபட்டு அதிகமான காய்கள் பிடிக்கும்.

**2) TNAU COTTON PLUS (பருத்தி பிளஸ்)**

TNAUவின் கண்டுபிடிப்பான CROP BUSTER தான் இந்த காட்டன் பிளஸ். ஏக்கருக்கு 2.5 கிலோ விதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூக்கும் தருணம் மற்றும் காய்க்கும் தருணத்திலும் 2 தடவை இலைவழியாக தெளிக்கலாம். இவ்வாறாக தெளிப்பதால் பருத்தி செடிக்கு தேவையான ஊட்ட சத்துகளும் நுண்ணூட்டமும் கிடைப்பதால் பூக்கள் உதிர்வது குறைவதுடன் மகசூல் 15-8% கூடுதலாக கிடைக்குமென ஆய்வுகள் உள்ளன. அத்துடன் இல்லாமல் அனைத்து காய்களும் ஒரே சீராக வெடித்து அறுவடைக்கு தயாராக இருக்கும்.

தேவைப்படுவோர் அருகேயுள்ள வேளாண் அறிவியல் மையத்தை நாடலாம். பருத்தி காய்ப்புக்கு வந்த பிறகு பருத்தி முடியும் வரை விவசாயிகளுக்கு வருமானம் தரக்கூடியதால் அதிகமாக பருத்தி சாகுபடியை மற்ற பயிர் சாகுபடி விட முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் ஒருங்கிணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, ஜன.4

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ்இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடு பவர்கள், இயற்கை இடுபொருட்களை தயாரிப்பவர்கள் மற்றும் சந்தைப்படுத்துபவர்களை ஒருங்கிணைத்து இயற்கை வேளாண்மை கருத்தரங்கு மற்றும் கண்காட்சி ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஜனவரி முதல் செவ்வாய்க்கிழமை 7.01.2025 அன்று நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கில் இயற்கை வேளாண்மை, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், இயற்கை பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற தலைப்பு களின் கீழ் தொழில்நுட்ப வல்லுநர்களால் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட உள்ளது. மேலும், இக்கருத்தரங்கில் ஒருங் கிணைந்த பண்ணையம் குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட உள்ளது. பயிர் சாகுபடி, ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, அசோலா வளர்ப்பு, மண்புழு உரம் தயாரிப்பு போன்ற ஒருங்கிணைந்த பண்ணையத்தின் அங்கங்கள் குறித்து தெளிவாக விளக்கப்பட உள்ளது. ஆர்வமுள்ள இயற்கை விவசாயிகள், இயற்கை இடுபொருள்கள் தயாரிப்போர் மற்றும் சந்தைப்படுத்துவோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்று பயனடையு மாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தொழில்நுட்பங்கள் மற்றும் இடுபொருட்கள் பற்றிய தகவல்களை தெரிந்து பயனடையுமாறு கேட்டுக் கொள் கிறோம். மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832, 81225 86689, 90805 40412 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யவும். மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# துவரைப் பயிரில் இலைவழி தெளிப்பு மூலம் பூ உதிர்வதைத் தடுக்கலாம்



இராணிப்பேட்டை, ஜன.4

துவரைப் பயிரில் இலை வழி தெளிப்பு மூலம் பூ உதிர்வதைத் தடுக்கலாம் என இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், திலகவதி தெரிவித்துள்ளார்.

அதிக மகசூலுக்கு இலை வழி தெளிப்பு துவரைப் பயிரில் காய்கள் அதிகம் பிடித்து மகசூல் அதிகரிக்க 2% டி.ஏ.பி கரைசலை தெளிக்க வேண்டும். எக்டருக்கு 10 கிலோ டி.ஏ.பி உரத்தை 25 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

பின்பு தெளிக்கும் சமயம் தெளிந்த கரைசலை மட்டும் எடுத்து 475 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூக்கும் நிலையில் ஒரு முறையும், காய்கள் பிடிக்கும் தருணத்தில் மறு முறையும் காலை அல்லது மாலை நேரத்தில் கைத் தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் 20 சதம் விதை கூடுதல் மகசூல் கிடைக்கும்.

பூ உதிர்வதை தடுக்க துவரைப் பயிரில் பூக்கின்ற 25 சதவிகித பூக்களே காய்க்கும். பூச்சி நோய் தாக்குதல், நுண்ணூட்ட பற்றாக்குறை, கடுமையான வறட்சி, நீர் தேங்குதல், காற்றின் வேகம் அதிகமாக இருத்தல் போன்ற காரணங்களால் பூக்கள் அதிகம் உதிர்கின்றன. இதனை பயிர் ஊக்கியான நாப்தலின் அசிட்டிக் ஆசிட் (என்.ஏ.ஏ) தெளித்து கட்டுப்படுத்தலாம். பூ உதிர்வதை கட்டுப்படுத்துவதால் 10-20 சதம் மகசூல் அதிகரிக்கலாம்.

**எவ்வளவு? எப்போது?**

4 மி.லி என்.ஏ.ஏ மருந்தினை 4.5 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து (40பிபிஎம்) தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டருக்கு 450 லிட்டர் கரைசல் தேவைப்படுகிறது. பூக்கும் தருணத்திலும், 15 நாட்களுக்குப் பின் மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

### கவனிக்க வேண்டியவை

செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். காலை அல்லது மாலையில் தெளிக்க வேண்டும். சரியான அளவில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். நல்ல நீரை பயன்படுத்த வேண்டும் மற்றும் பூச்சி மற்றும் நோய் பாதுகாப்பு மருந்துகளுடன் கலக்கக் கூடாது என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### திட்டம்

அனந்தலை கிராமத்தில் விவசாயி இருசனுக்கு, உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வரிசையில் துவரை சாகுபடிசெய்திட வேளாண்மைத்துறை மூலம் துவரை விதை, உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்,




நுண்ணூட்ட கலவை ஆகியவை மானியத்தில் வழங்கப்பட்டு இலைவழி தெளிப்பிற்கு பின்னேர்ப்பு மானியம் வழங்க பட்டுள்ளது.

### செயல் விளக்கம்

வேளாண்மை இணை இயக்குநர் அசோக்குமார் தலைமை யிலும் வேளாண்மை துணை இயக்குநர் செல்வராஜ் முன்னிலையிலும் விவசாயி சாகுபடி செய்துள்ள துவரைப் பயிரில் டி.ஏ.பி கரைசலை தெளிக்கும் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர், திலகவதி, உதவி விதை அலுவலர் மோகன், உதவி வேளாண்மை அலுவலர் கலையரசன், உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜெயபிரகாஷ் உடன் இருந்தனர்.

# முட்டைக்கோசில் பச்சைக் காவடிப்புழு தாக்குதலும் அதன் கட்டுப்பாட்டு முறைகளும்

முட்டைக்கோசின் அறிவியல் பெயர் ட்ரைக்கோப்ளுசியாநி ஆகும்.

**பூச்சியின் விபரம்**

- முட்டை : பச்சை நிறக்கோடுகளுடன் கூடிய முட்டைகளை தனித்தனியே இலையின் அடிப்பரப்பில் இடும்.
- **புழு** : பச்சை நிறத்தில், மங்களான வெள்ளைக்கோடு களுடனும் காணப்படும்.
- **பூச்சி :** அந்துப்பூச்சி பழுப்பு நிறத்தில், குண்டாக இருக்கும். தலை மற்றும் மார்பு பகுதி சாம்பல் நிறத்திலும் வயிற்றுப்பகுதி வெள்ளை நிறத்திலும் இருக்கும். முன் இறக்கை பழுப்பாக வெண்ணிறக் கோடுகளுடன் காணப்படும்.




**சேதத்தின் அறிகுறிகள்**

- சேதமடைந்த இலைகள் ஆரம்பத்தில் துளைகளுடன் இருக்கும்.
- அதிகமாகத் தாக்கப்பட்ட பயிரில் இலைக்காம்புகளை மட்டுமே காணமுடியும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- ஆரம்பக் கட்டத்தில் காவடிப் புழுக்களை கையால் சேகரித்து அழிக்கலாம்.
- ஒரு ஹெக்டேருக்கு ஒரு விளக்குப்பொறி அமைப்பதன் மூலம் இதன் அந்த பூச்சியை கவர்ந்து அழிக்கலாம்.

● கோராஜன் பூச்சிக் கொல்லி மருந்தினை 5 மில்லி லிட்டர்/பத்து லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிப்பதன் மூலம் முட்டைக்கோசில் பச்சைக் காவடிப்புழுவை கட்டுப்படுத்தலாம்.



புழு



பூச்சி

தகவல் : பசுபதி இ, உதவிப் பேராசிரியர் (வேளாண் பூச்சியியல் துறை), ஜெயமுருகன் செ, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல் துறை), கிருஷ்ணா வேளாண் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, ஸ்ரீரெங்கபுரம், மதுரை – 625 532.

# நெல் வளர்ச்சிக்கு நீலப்பச்சைப் பாசியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள்

நெல் வயல்களிலும், நீர்த்தேக்கங்களிலும் வளரும் நீலப்பச்சைப்பாசி நெற்பயிருக்கு தழைச்சத்தைக் கிடைக்கச் செய்யும் முக்கியமான நுண்ணுயிர் உரமாகும். நீலப்பச்சைப் பாசியில் பல்வேறு வகையான பச்சையங்கள் உள்ளன.

இந்தப் பச்சையம் இருப்பதால் இவை ஒளிச்சேர்க்கை மூலம் தேவையான சக்தியை தானே உற்பத்தி செய்து கொள்கின்றன. நெல் பயிர்களில் எப்போதுமே நீரின் தேக்கம் இருப்பதால் இவை விரைந்து பெருகி வளர்ந்து நெற்பயிருக்கு தழைச்சத்தினை வழங்குகின்றன. இவை நீலம் கலந்த பச்சை நிறமாக இருப்பதால் இதற்கு நீலப்பச்சைப் பாசி என்று பெயர்.

**பயன்கள்**

● இளம் செல்களில் பச்சையம் மிகுந்து இருப்பதால் இவை ஒளிச்சேர்க்கை மூலம் கரிமப் பொருளையும், ஆற்றலையும் உற்பத்தி செய்கின்றன.

● ஹெட்டிரோசிஸ்ட் எனப்படும் செல்களில் நைட்ரோஜினேஸ் நொதி இருப்பதால் இவை தழைச்சத்தை நிலைநிறுத்துகின்றன.

● இவை சுரக்கும் அங்கக அமிலங்கள் ஓரளவு மணிச்சத்தை கரைத்துத் தருவதுடன் மண்ணின் களர் தன்மையையும் நீரின் கடினத் தன்மையையும் மெல்ல மெல்ல மாற்றித் தருகின்றன.

இவை வெளியிடும் ஆக்ஸிஜன் தண்ணீரில் கரைந்த ஆக்ஸிஜன் அளவை அதிகப்படுத்துகின்றது. இந்த ஆக்ஸிஜன் அதிகமாவதால் தொடர்ந்து நீரில் மூழ்கியுள்ள நெல் வயல் மண்ணில் இரும்பு மற்றும் கந்தக சல்பைடுகள் மிகுதியாகாமல் தடுக்கப்பட்டுவேருக்கு ஏற்படும் தீமை குறைகிறது.

● வைட்டமின் பி 12 மற்றும் வளர்ச்சி ஊக்கிகளை சுரந்து பயிருக்கு நன்மையளிக்கின்றன.

● மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துவதுடன் நீர் வற்றும் போது மண் ஈரம் முற்றிலுமாக வறண்டு போகாமல் காக்கின்றன.




**பரிந்துரை மற்றும் உபயோகிக்கும் முறை**

● எக்டேர் ஒன்றுக்கு 10 கிலோ பாசி சில்லுகளை பொடி செய்து நட்ட 10ம் நாளில் 25 கிலோ தொழுஉரம் மற்றும் 25 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராக தூவ வேண்டும்.

● களைக்கொல்லியை நட்ட 3-5 நாட்களில் பயன் படுத்தினால் நட்ட 15ம் நாள் பாசி இடுவது நல்லது.

● பாசி நிலைத்து வளர தொடர்ந்து 3 அல்லது 4 பருவங்கள் பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் ஒரு எக்டேரில் சுமார் 25 30 கிலோ தழைச்சத்தை நிலை நிறுத்தலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik Pipe®
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
CML-6400119610
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் கல்லூரி மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி




தேனி, ஜன.4

தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டாரம், காமாட்சிபுரத்தில் அமைந்துள்ள சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் கம்பம் ஸ்ரீ ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரியின் உணவு மற்றும் ஊட்டச்சத்து துறை மாணவிகளுக்கு உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட தொழில் நுட்பங்கள் பற்றிய 10 நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டது.

வேளாண் அறிவியல் மையத்தின் தலைவர் முனைவர் பெ.பச்சைமால், சென்டெக்ட் நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றி தலைமையுரையாற்றினார். மையத்தின் திட்ட ஒருங்கிணைப் பாளர் (பொ) பொ.மகேஸ்வரன், வேளாண் அறிவியல் மையத்தின் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கமளித்தார். மனையியல் தொழில்நுட்பவல்லுநர் ம.இரம்யா சிவ செல்வி உணவு பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டல் பற்றிய தொழில்நுட்பவுரையாற்றினார்.

மேலும் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் உருவாக்கப் பட்ட பெண் தொழில்முனைவோர்களின் இடங்களுக்கு கண்டுணர்வுக்காக அழைத்துச் செல்லப்பட்டது. தேனி மாவட்டத்தில் விளையக்கூடிய விளை பொருட்களான சிறு தானியங்கள், திராட்சை, வாழை, வெற்றிலை, நெல்லிக்காய், காய்கறிகள் மற்றும் அடுமனைப்பொருட்கள் தயாரித்தல் பற்றிய பயிற்சி செயல்முறை விளக்கத்துடன் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் தனுஜா, கலைவாணி, பாண்டியம்மாள், பிரியங்கா மற்றும் வெண்ணிலா ஆகிய கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிறைவில் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெற்பயிரில் வேளாண் சூழலியல் குறித்த பகுப்பாய்வு



மதுரை, ஜன.4

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் தண்டலை கிராமத்தில் நெல் வயலில் வேளாண் சூழலியல் பகுப்பாய்வு ஆய்வு பற்றிய களப்பயிற்சி அளிக்கப்பட்டது. அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், பூச்சி நோய் தாக்காத தரமான அரசு சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் எனவும், உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா, ஜிங்க் பாக்டீரியா, உயிர் பூஞ்சான கொல்லிகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனஸ் அகியவை பயன்படுத்துதல், பயன்படுத்தும் முறைகள், அதன் பயன் பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியில் மதுரை மாவட்ட உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெயந்தி ஆலோசனை வழங்கினார். மேலும் பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணுதல், அதனை கட்டுப்படுத்தும் முறைகள், வயலில் காணும் நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்தல், வயல்வெளிகளில் விளக்கு பொறிவைத்தல், இனக்கவர்ச்சி பொறி வைத்தல், டி வடிவ குச்சிகள் வைத்தல், பயிர் பொருளாதார சேத நிலைகளுக்கு திகமான நிலையில் இயற்கை பூச்சிக் கொல்லிகளை பயன் படுத்துதல், இரசாயன உரங்களை பகிர்ந்தளித்தல், வரப்புகளில் உளுந்து, பச்சைப்பயிறு, தட்டைப்பயறு போன்றவை சாகுபடி செய்தல், பயிர் சுழற்சி முறைகள் கையாளுதல் போன்ற இயற்கை சூழலை பாதுகாக்கும் முறைகளுடன் சாகுபடி செய்தல் அவசியம் என்பதை பயிற்சியில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் விக்னேஸ் ஏற்பாடு செய்திருந்தார். பயிற்சியில் வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார், அட்மா தொழில்நுட்ப பணியாளர்கள் வேல்முருகன், வசந்தி, சௌந்தரராஜன், பயிர் அறுவடை பணி யாளர் கௌசல்யா, தண்டலை கிராம முன்னோடி விவசாயிகள் வீரணன், கிருஷ்ணன், பாலு, ராஜராஜன், லீலாவதி உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நிலக்கடலையில் (மணிலாவில்) அசுவினி பூச்சி தாக்குதல் : முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க சிறுகமணி கேவிகே அறிவுறுத்தல்

திருச்சி, ஜன.4

திருச்சி மாவட்டத்தில் உள்ள மணிலாவில் அசுவினி பூச்சி தாக்குதல் சில இடங்களில் காணப்படுகிறது. இதை கட்டுப்படுத்த கீழ்கண்ட முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமாறு சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**அசுவினி**

1. வளர்ந்த பூச்சிகள் சிவப்பு கலந்த பழுப்பு நிறமாக இருக்கும்.

2. இலைகள் பச்சைப் புள்ளிகளாகவும், பச்சையமின்றியும் காட்சியளிக்கும்.

3. செடியின் கொழுந்துப்பகுதி சாய்ந்தும் வளர்ச்சி குன்றியும் காணப்படும்.

**மேலாண்மை முறைகள்**

நிலக்கடலையில் அசுவினி பூச்சியானது, இலைகள் மற்றும் குருத்துக்களின் அடிப்பகுதியில் இருந்து சாறை உறிஞ்சுவதால், செடியின் வளர்ச்சிக் குன்றி காணப்படும். மேலும், கரும் பூஞ்சானம் இலையின் மீது படிந்து ஒளிச்சேர்க்கையை தடை செய்கிறது. அசுவினி பூச்சிகளை கட்டுப்படுத்த மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி 5 என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு வைக்கவும். தாக்குதலின் ஆரம்ப நிலையில் வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது அசாடிராக்டின் 300 மி.லி அல்லது வெர்ட்டிசிலியம் லெக்காணி 1 கிலோ என்ற அளவில் தெளிக்கவும்.

தாக்குதல் அதிகமாக தென்பட்டால் ஒரு ஏக்கருக்கு இமிடா குளோஃபிரிட் 17.8 SL 65 மில்லியை 100 லிட்டர் நீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜா பாபு தெரிவித்தார்.

# வெங்கடேசபுரம் ஊராட்சியில் ராபி பருவம் குறித்த விவசாயிகள் பயிற்சி

கிருஷ்ணகிரி, ஜன.4

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான வெங்கடேசபுரம் ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கல்யாணசுந்தரம், உதவி தோட்டக்கலை அலுவலர் திருவேங்கடம், உதவி வேளாண்மை அலுவலர் முனிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது, கிராம முன்னேற்ற குழுவின் நோக்கம் செயல்படும் விதம், திட்டங்கள் மற்றும் மானியங்கள் மக்களிடையே சேர்த்தல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளின் பயன்கள் அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், விவசாயிகள் சிறுதானியம் மற்றும் பயறு வகைகளை பயிரிட்டு மானியங் களை பெற்று கொள்ளலாம் என்று கூறினார். இதற்குண்டான விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என்றும் விவசாயிகள் விதைப் பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் அடையலாம் என்றும் கூறினார்.

கிராம வேளாண் முன்னேற்ற குழு சிறப்பாக செயல்பட்டு இயற்கை பண்ணையம் அமைத்து நோயற்ற வாழ்வும் இரட்டிப்பு இலாபம் அடையலாம் மேலும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் குறைந்த செலவில் இரட்டிப்பு இலாபம் அடையலாம் என்று கூறினார். இதற்கு கிராம வேளாண் முன்னேற்ற குழுவானது சிறப்பாக செயல்பட்டு மற்ற விவசாயிகளுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன் கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கல்யாணசுந்தரம் ஆகியோர் தம் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்கள் .

உதவி வேளாண்மை அலுவலர் முனிராஜ் நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க் சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் திருவேங்கடம் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவசமாக வழங்கப்படும் நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார்.

ஊராட்சி மன்ற தலைவர் தேவராஜ் நம் வெங்கடேசபுரம் ஊராட்சிக்கு அரசு வழங்கிய கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகள் வாங்கி பயன் அடைய வேண்டும் என்று கூறினார்.

இறுதியாக இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர்.

மேலும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் கண்காட்சி இடம் பெற்றிருந்தது. உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம. முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் சொட்டு நீர் பாசனத்தின் பயன்கள் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்.

உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உழவன் செயலி விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்தும் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினார்கள்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

